# மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (MITC)

DBS

பெரிய அளவில் வாழுங்கள், குறைவாகவே வங்கியைப் பயன்படுத்துங்கள்

**I. இந்த MITC பின்வரும் தயாரிப்புகளை உள்ளடக்கியது:**

**a. வீட்டுக் கடன்கள்**

**b. சொத்து மீதான கடன்கள் (“LAP”)**

**II. கடனின் சாத்தியமும் நோக்கமும்**

a. **வீட்டுக் கடன்கள்:** இவை தயாரான சொத்து/கட்டப்படும் சொத்தை வாங்குவதற்கு, வீட்டை விரிவுபடுத்துவதற்கு அல்லது வேறு வங்கி/நிதி நிறுவனத்தில் கடன் பெறுபவர் முன்பு பெற்ற வீட்டுக் கடனுக்குப் பதிலாகப் பெறுவதற்காக/மாற்றுவதற்காக அனுமதியளிக்கப்படும் கடன்களாகும். குடியிருப்பு சொத்தை வாங்குவதற்கு/கட்டுவதற்கு/விரிவுபடுத்துவதற்கு மட்டுமே கடன் அனுமதியளிக்கப்படும். அத்தகைய சொத்து இந்தியாவிற்குள் இருக்க வேண்டும்.

b. **LAP**: இவை DBS பேங்க் இந்தியா லிமிடெட்டால் **(“கடன் வழங்குபவர்”)** ஏற்கத்தக்க, கடனாளியின் பல்வேறு தனிப்பட்ட அல்லது வணிக நோக்கங்களுக்காக அனுமதியளிக்கப்படும் கடன்களாகும். இதன் நோக்கம் கடனுக்காக விண்ணப்பிக்கும்போது கடனளிப்பவருக்கு திட்டவட்டமாக விவரிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும். அத்தகைய கடன், இந்தியாவிற்குள் அமைந்துள்ள, அசையாத குடியிருப்பு சார்ந்த, முழுமையாகக் கட்டப்பட்ட, தெளிவான மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய உரிமைப் பத்திரத்துடன் கூடிய வில்லங்கமில்லாச் சொத்தின் பிணையத்திற்கு எதிராக வழங்கப்படுகிறது.

c. எல்லாக் கடன்களையும் இந்தியக் குடிமக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

**III. வட்டி**

கடன் பெறுபவர்(கள்) மற்றும் கடன் வழங்குபவர் ஆகியோரால் மற்றும் அவர்களுக்கு இடையில் செயல்படுத்தப்படும் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன் பெறுபவர்(கள்) கடனுக்கான வட்டியைச் செலுத்த வேண்டியிருக்கும். வட்டி திரள்கிறது மற்றும் அன்றைய மொத்த நிலுவைத் தொகையில் தினசரி அடிப்படையில் அது கணக்கிடப்படுகிறது. மேலும் அது கூட்டப்பட்டு, கடனளிப்பவர் வழங்கிய கட்டண அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்ட நிலுவைத் தேதிகளில் மாதந்தோறும் செலுத்தப்படும். சாதாரண நிலையில் உள்ள வட்டி சமமான மாதாந்திரத் தவணைகளில் (EMI-கள்) அல்லது கடன் பெறுபவர்(கள்) செலுத்த வேண்டிய முன்கூட்டிய-EMI-களில் ஒரு பகுதியாக இருக்கும். கடன் பெறுபவர் இயல்புநிலை வட்டி, கூடுதல் வட்டி மற்றும் வட்டி மீதான வட்டி (கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு இணங்க) ஆகியவற்றைக் கூடுதலாகச் செலுத்த வேண்டும், அதாவது, அது EMI-களின் அல்லது முன்கூட்டிய-EMI-களின் ஒரு பகுதியாக இருக்காது.

**IV. வட்டி விகிதம் /வட்டியின் வகை மற்றும் வட்டி விகிதத்தில் மாற்றம்**

வட்டி விகிதம் என்பது கடனுக்கான வட்டியைக் கணக்கிட்டு கடனளிப்பவர் விதிக்கும் விகிதமாகும்.

**வட்டி விகிதம் 3 வகைகளாக இருக்கலாம்:** நிலையான வட்டி விகிதம், மாறும் வட்டி விகிதம் அல்லது கலப்பு வட்டி விகிதம் *(நிலையான வட்டி மற்றும் மாறும் வட்டி விகிதம் ஆகியவற்றின் கலவையாக இருப்பது, அதாவது வட்டி விகிதம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிலையானதாக இருக்கும், மீதமுள்ள கடனிருப்பு காலகட்டத்திற்கு மாறும் வட்டி விகிதமாக இருக்கும்)*. ஒரு வட்டி விகிதத்தில் இருந்து மற்றொன்றுக்கு மாறுவது கடனளிப்பவரால் அவரது விருப்புரிமையின் பேரில், கடனளிப்பவர் குறிப்பிடும் சேவைத் தொகைகள்/ கட்டணங்களை கடன் பெறுபவர் செலுத்துவது உட்பட, கடன் வழங்குபவர் பொருத்தமானதாகக் கருதும் அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கடனளிப்பவரால் அனுமதிக்கப்படலாம். மாறும் வட்டி விகிதம் அவ்வப்போது மாற்றத்துக்கு உட்படும் RBI பாலிசி ரெப்போ விகிதத்துடன் தொடர்புடையது. RBI பாலிசி ரெப்போ விகிதத்தில் ஏற்படும் எந்த மாற்றமும், கடனுக்கு விதிக்கப்படக்கூடிய வட்டி விகிதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். அத்தகைய மாற்றம் கடன் பெறுபவருக்கு அறிவிக்கப்படுவதுடன் அத்தகைய மாற்றம் நிகழ்ந்த தேதியிலிருந்து செயல்பாட்டுக்கு வரும். மாறும் வட்டி விகிதத்திற்கான நிலையான மீட்டமைப்பு தேதி *(கடன் வழங்குபவரால் கடன் பெறுபவருக்குத் தெரிவிக்கப்படாத பட்சத்தில்)* ஒவ்வொரு காலாண்டின் 7-வது நாள் அதாவது ஜனவரி 7, ஏப்ரல் 7, ஜூலை 7, அக்டோபர் 7.

**V. பொருந்தக்கூடிய சேவைத் தொகை மற்றும் கட்டணங்கள்**

கடன் பெறுபவருக்கு (பெறுபவர்களுக்கு) பொருந்தக்கூடிய சேவைத் தொகைகள் மற்றும் கட்டணங்கள் அனைத்தையும் கடன் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்ட கட்டண அட்டவணையில் மற்றும்/அல்லது கடன் வழங்குபவரின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் காணலாம்.

பொருந்தக்கூடிய சேவைத் தொகைகள் மற்றும் கட்டணங்கள் அவ்வப்போது மாறக்கூடும் என்பதை நினைவில் கொள்ளவும். இத்தகைய மாற்றங்கள் கடன் வழங்குபவரின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

கடன் வாங்கியவர், கடனளிப்பவர் மற்றும் அதன் அதிகாரிகள், இயக்குநர்கள், பணியாளர்களை, நேரடியாகவும் மறைமுகமாகவும், உரிமைகோரல்கள், சேதங்கள், இழப்புகள், விலைகள் மற்றும் செலவுகள், கடன் வாங்குபவர் மற்றும்/அல்லது அவரது பணியாளர்கள் அல்லது அவர் கீழுள்ள முகவர்களின் ஏதேனும் செயல்பாடு, விடுபடுதல், மீறல் அல்லது தவறுதலால் எழும் வழக்கறிஞர்களின் கட்டணம் அல்லது கடன் ஒப்பந்தத்தின் கீழ் அல்லது நிறைவேற்றும் நடைமுறை மற்றும்/ அல்லது பிற வகையில் கடன் பெறுபவருக்குக் கடனை வழங்குவதன் விளைவாக அல்லது கடன் ஒப்பந்தத்தின் கீழ் அதன் கடமைகளை நிறைவேற்றுவதன் விளைவாக கடனளிப்பவருக்கு ஏற்படும் செலவினங்கள் உள்ளிட்ட அனைத்திலிருந்தும் அனைத்துக்கும் எதிராகவும், இழப்பீடு வழங்கி, காப்பாற்றி, பாதுகாத்து, பாதிப்பின்றி வைத்திருப்பார்.

**VI. அபராதக் கட்டணங்கள்**

கீழே உள்ள ஏதேனும் நிகழ்வு அல்லது எல்லா நிகழ்வுகளும் நிகழும் பட்சத்தில், அட்டவணை I-இல் (“அபராதக் கட்டணங்கள்”) குறிப்பிடப்பட்டுள்ளபடி கடனளிப்பவருக்கு அபராதக் கட்டணங்களைச் செலுத்த கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்:-

a) கடன் பெறுபவர் இந்தக் கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி EMI அல்லது வேறு ஏதேனும் கட்டணங்கள் மற்றும் தொகையைச் செலுத்தாதிருத்தல் தொடர்பான பொருள் சார்ந்த மீறலை ஏற்படுத்தும் பட்சத்தில், கடனளிப்பருக்கு காலங்கடந்த EMI தொகைக்கான அபராதக் கட்டணங்களை செலுத்த கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார். அபராதக் கட்டணங்கள் காலங்கடந்த நாட்களின் உண்மையான எண்ணிக்கையின் அடிப்படையில் தினசரி கணக்கிடப்படும். மேற்கூறியவற்றிற்கு எந்தவித பாரபட்சமும் இல்லாமல், கடனளிப்பவர் கடனையோ அல்லது அதில் ஏதேனும் ஒரு பகுதியையோ திரும்பப் பெற்றால், திரும்பப் பெறும் தேதியிலிருந்து கடனளிப்பவர் முழுப் பணமும் பெறும் தேதி வரை, கடனளிப்பவருக்கு செலுத்த வேண்டிய மீதமுள்ள நிலுவைத் தொகைக்கான அபராதக் கட்டணங்களை கடன் பெறுபவர் செலுத்த வேண்டும்.

b) கடன் பெறுபவரால் பொருள் சார்ந்த மீறல் (மேலே VI (a)-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பணம் செலுத்தாதிருத்தல் தவிர்த்து) ஏற்படும் பட்சத்தில், கடனளிப்பவர் திருப்தி அடையும் வகையில் கடன் பெறுபவரால் பொருள் சார்ந்த மீறல் சரிசெய்யப்படும் வரை, அட்டவணை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள அபராதக் கட்டணங்கள் விதிக்கப்படும்.

இந்த உட்பிரிவில் உள்ள எதுவும் தவறுதல் நிகழ்வை அறிவிக்கவும் கடன் ஒப்பந்தத்தின் கீழ் அதில் உள்ள உரிமைகளைப் பயன்படுத்தவும் கடன் வழங்குபவருக்கு உரிய உரிமையைப் பாதிக்காது அல்லது பாரபட்சம் காட்டாது எனும் பட்சத்தில்.

**VII. வழங்கலுக்கான நிபந்தனைகள்**

கடன் ஒப்பந்தத்தில் முன்பாக மிகக் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகளின் நிறைவேற்றத்திற்கு உட்பட்டு, கடன் வழங்குபவர் கடனை *(அல்லது அதன் எந்தப் பகுதியையும்)* அதன் மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கலாம், அவற்றில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. முந்தைய மற்றும் பிந்தைய நிபந்தனைகளின் முழுப் பட்டியல் கடன் ஒப்பந்தத்தின் 3.2 மற்றும் 3.3 ஆகிய ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. கடன் பெறுபவர்(கள்) அவற்றைக் கவனமாகப் படிக்க வேண்டும்.

- கடன் பெறுபவர் வங்கியின் கடன் தகுதிக்கான தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்
- கடன் பெறுபவர்(கள்) கடன் வழங்குபவருக்கு சாதகமாக தேவையான அனைத்து பிணைய ஆவணங்களையும் செயல்படுத்தியிருப்பதுடன், சொத்துக்கான அசல் உரிமைப் பத்திரங்களையும் கடன் வழங்குபவரிடம் அளித்திருக்க வேண்டும்.
- வீட்டுக் கடனாக இருந்தால், கடனோ அல்லது அதன் ஒரு பகுதியோ வழங்கப்படுவதற்கு முன் கடன் பெறுபவர் முழு மார்ஜின் தொகையையும் (அதாவது வாங்கிய விலைக்கும் அனுமதியளிக்கப்பட்ட கடன் தொகைக்கும் உள்ள வித்தியாசம்) செலுத்த வேண்டும்.
- “தவறுதல் நிகழ்வுகள்” *(கடன் ஒப்பந்தத்தின் 11-ஆம் ஷரத்தின் கீழ் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளபடி)* நடந்திருக்கக்கூடாது. இதில் கடன் வழங்குபவருக்குத் தவறான தகவல்களை வழங்குவது, கடன் வாங்கியவர் திவாலானதாக அறிவிக்கப்படுவது, பிணையமாக்கப்பட்ட சொத்து மதிப்பில் தேய்மானம் மற்றும் கடன் பெறுபவரால் கடன் வழங்குபவரிடம் இருந்து பெறப்பட்ட வேறு ஏதேனும் கடன் அல்லது வசதியின் கீழ் கடமையை முறையாக நிறைவேற்றுவதில் தவறியது ஆகியவை அடங்கும்.
- கடன் பெறுபவர், கடன் வழங்குபவருக்கு தேவையான அனைத்து ஆவணங்கள், உறுதிமொழிகள், இழப்பீடுகள், அறிவிப்புகள் போன்றவற்றை அளித்து / பெற்றிருப்பதுடன் கடனளிப்பவருக்குத் தேவையான அனைத்து செயல்கள், பத்திரங்கள் முதலியவற்றையும் செய்திருக்க / பெற்றிருக்க வேண்டும்.

**VIII. கடன் கையளிப்பு / வழங்கல்**

கடன் பெறுபவரிடமிருந்து ஒரு டிராக்டவுன் கோரிக்கையைப் பெற்றவுடன் கடன் வழங்குபவரால் கடன் (அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதி) வழங்கப்படலாம். முழுக் கடன் தொகையும் கடன் வழங்குபவரால் குறிப்பிடப்பட்ட கிடைக்கக்கூடிய காலகட்டத்திற்குள் பெறப்பட வேண்டும். DBS கடன் வழங்குபவரின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில், கடன் வழங்குபவர் பொருத்தமானதாகக் கருதும், கிடைக்கக்கூடிய காலத்திற்கு அப்பால் கூடுதல் நாட்களுக்கு கடன் அனுமதியளித்தல் நீட்டிக்கப்படலாம். கடனளிப்பவர், எந்த நேரத்திலும், தனது சுய விருப்பத்தின் பேரில், கடனை (முழுவதுமாக அல்லது பகுதியாக) திரும்பப் பெறலாம்.

பணம் செலுத்தும் முறையும் வழிவகையும் கடன் வழங்குபவரின் விருப்பத்திற்கு விடப்படுகிறது. கடன் அல்லது அதன் எந்தப் பகுதியையும் கடன் வழங்குபவர் கடன் பெறுபவருக்கோ அல்லது பொருந்தக்கூடிய சொத்து டெவலப்பர்/பில்டர்/கட்டுமான நிறுவனம்/ஒப்பந்ததாரர்/விற்பனையாளருக்கோ அல்லது கடன் வழங்குபவரது சொந்த விருப்புரிமையின் பேரில் அவர் பொருத்தமாகக் கருதும் சம்பந்தப்பட்ட வேறு ஒருவருக்கோ நேரடியாக வழங்கலாம். கடன் பெறுபவர் பெறும் கடன், அவர் வேறொரு வங்கி/நிதி நிறுவனத்தில் முன்பு பெற்ற வீட்டுக் கடனுக்குப் பதிலானதாக/மாற்றாக இருந்தால், கடன் தொகை அல்லது அதன் எந்தப் பகுதியையும் கடன் வழங்குபவர் கடன் பெறுபவருக்கோ அல்லது கடன் வழங்குபவரது சொந்த விருப்புரிமையின் பேரில் அவர் பொருத்தமாகக் கருதும் அது போன்ற பிற வங்கி/நிதி நிறுவனத்துக்கோ நேரடியாக வழங்கலாம்.

**IX. திருப்பிச் செலுத்துதல்**

திருப்பிச் செலுத்துதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கடனளிப்பவரால் முன்னதாகக் கோரப்படாத பட்சத்தில் கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு இணங்க, அல்லது கடன் வழங்குபவரால் அவ்வப்போது கடன் பெறுபவருக்குத் தெரிவிக்கப்படும் விதத்தில், சமமான மாதாந்திரத் தவணைகள் அல்லது EMI-கள் மூலம், குறையும் அசல் மீதத்தின் மீது கணக்கிட்ட வட்டியுடன் சேர்த்து கடன் வாங்கியவர் அசல்/கடனைச் செலுத்துவார். கடன் வழங்குபவர் கருத்தின்படி மறு கணக்கீடு/மாற்றம் தேவைப்படும் எந்தவொரு நிகழ்வின்போதும் கடன் பெறுபவர் செலுத்த வேண்டிய EMI(கள்) தொகைகள் மற்றும் அதைச் செலுத்துவதற்கான தேதிகளை மீண்டும் கணக்கிடுவதற்கு மற்றும்/அல்லது மாற்றியமைப்பதற்கு கடன் வழங்குபவருக்கு உரிமை உண்டு. அத்தகைய மாற்றம் ஏற்பட்டால், கடன் பெறுபவர் இதன்மூலம் கடன் வழங்குபவருக்குத் தேவைப்படும் புதிய பணம் செலுத்துதல் கருவிகளை அளிப்பதற்கு ஒப்புக்கொண்டு உறுதியளிக்கிறார். கடனளிப்பவர் அவ்வப்போது தெரிவிக்கும் திருப்பிச் செலுத்துதல் அட்டவணையுடன் கண்டிப்பாக இணங்குவது கடனை வழங்குதலுக்கான இன்றியமையாத நிபந்தனையாகும்.

பின்வருவன நிகழும் பட்சத்தில், திருப்பிச் செலுத்தும் அட்டவணையை மாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு கடன் வழங்குபவருக்குக் கிடைக்கும் பொதுவான உரிமைக்குப் பாரபட்சம் இல்லாமல், கடனளிப்பவர் திருப்பிச் செலுத்தும் அட்டவணையை *(ஒவ்வொரு PEMI (பொருந்தக்கூடியது) அல்லது EMI தொகையை வரம்பு இல்லாமல் மாற்றுதல் உட்பட)* திருத்துவதற்கு உரிமையுடையவர்:

(a) வட்டி விகிதத்தில் ஏற்படும் மாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில், கடன் ஒப்பந்தத்தின் வரையறைகளின்படி கடனுக்கு விதிக்கப்படக்கூடிய வட்டி விகிதத்தில் ஏற்படும் ஏதேனும் மாற்றம்; மற்றும்/அல்லது

(b) கடன் தொகையை தவணைகளாக/பகுதிகளாக வழங்குதல், ஒவ்வொரு முறையும் கடனின் கீழ் ஒரு தவணை வழங்கப்படும்.

மாறும் வட்டி விகிதத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், கடனளிப்பவர் தனது சொந்த விருப்பத்தின் பேரில், EMI தொகையை மாற்றாதிருக்க முடிவு செய்யலாம். அவ்வாறு நிகழும் பட்சத்தில், மாறும் வட்டி விகிதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டால், EMI-இல் வட்டிக் கூறு அதிகரிக்கும். அத்துடன், அசல் கூறு குறையும். இதன் விளைவாக கடனின் கால நீட்டிப்பு ஏற்படுவதுடன், மாறும் வட்டி விகிதம் குறையும்போது நேர்மாறாகவும் நிகழும். மாறும் வட்டி விகிதத்தில் ஏதேனும் அதிகரிப்பு மற்றும் அதன் விளைவாக கடன் வாங்கியவர் செலுத்த வேண்டிய EMI-கள்/PEMI-களில் அதிகரிப்பு ஏற்பட்டால், கடன் வாங்கியவர் கடன் வழங்குபவரால் அவரது சொந்த விருப்பப்படி தீர்மானிக்கப்பட்டு கடன் வாங்குபவருக்குத் தெரிவிக்கப்பட்ட, அத்தகைய அதிகரித்த EMI/PEMI தொகை மற்றும்/அல்லது அதன் விளைவாக வேறுபட்ட தொகையைச் செலுத்த வேண்டும். கடனளிப்பவர், தன் சொந்த விருப்பத்தின் பேரில், ஆனால் அவ்வாறு செய்யக் கட்டுப்படுத்தப்படாமல், கடன் பெறுபவர் மறுநிர்ணயக் கட்டணத்தைச் செலுத்தும்போது கடன் பெறுபவரின் வேண்டுகோளின் பேரில், விதிக்கப்படக்கூடிய வட்டி விகிதத்தை கடனளிப்பவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வருங்கால தேதியிலிருந்து மாற்றுவதற்கு கடன் பெறுபவரை அனுமதிக்கலாம். மறுநிர்ணயக் கட்டணம் கடனளிப்பவரால், அவ்வப்போது அவரது சொந்த விருப்பப்படி தீர்மானிக்கப்படும். பொருந்தக்கூடிய வட்டி விகிதத்தில் மாற்றம் செய்வதற்கான கோரிக்கையை கடன் வாங்குபவர் எழுப்பும் ஒவ்வொரு முறையும் கடன் வழங்குநரால் அத்தகைய மறுநிர்ணயக் கட்டணம் தெரிவிக்கப்படும்.

கடன் பெறுபவர், கடன் வழங்குபவரிடம் வைத்திருக்கும் தங்கள் கணக்கிலிருந்து நிலையான அறிவுறுத்தல்கள் மூலமாகவோ அல்லது மின்னணு கிளியரிங் சிஸ்டம் (டெபிட்) மூலமாகவோ, தேசிய தானியங்கு கிளியரிங் ஹவுஸ் (NACH) அமைப்பின் மூலம் அத்தகைய கொடுப்பனவுகளுக்கான ஆணையை அமைப்பதன் மூலம் அல்லது கடனளிப்பவருக்கு பிந்தைய தேதியிட்ட அல்லது தேதியிடப்படாத காசோலைகளின் தொகுப்புகளை வழங்குவதன் மூலம் அல்லது கடனளிப்பவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய பிற முறைகள் மூலம் EMI-களைச் செலுத்த வேண்டும். அத்தகைய அறிவுறுத்தல்கள்/ஆணைகள்/காசோலைகள் செயல்படுத்தப்பட்டு கடன் வழங்குபவரால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் (நேரங்களில்) கடனளிப்பவருக்கு வழங்கப்பட வேண்டும்.

கடன் பெறுபவர் பணம் செலுத்துதல் அறிவுறுத்தல்கள்/ஆணை/காசோலை பணமாக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும், எனவே பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:

- டெபிட் செய்ய நியமிக்கப்பட்ட கணக்கில் போதுமான நிதி இருத்தல்;
- திருப்பிச் செலுத்துவதற்காக கொடுக்கப்பட்ட காசோலைகள்/பணம் செலுத்தும் கருவிகளில் ரத்து/பணம் செலுத்துதல் நிறுத்தம் செய்யாதிருத்தல்;
- நிலையான அறிவுறுத்தல்கள்/ECS/NACH ஆணை(கள்) கடன் வழங்குபவரின் எழுத்துப்பூர்வ முன் அனுமதியின்றி மாற்றப்படாதிருத்தல் அல்லது ரத்து செய்யப்படாதிருத்தல்; மற்றும்
- கடன் வழங்குபவரின் எழுத்துப்பூர்வ முன் அனுமதியின்றி டெபிட் செய்யப்பட வேண்டிய நியமிக்கப்பட்ட கணக்கு மூடப்படாதிருத்தல் மற்றும் மாற்றப்படாதிருத்தல்;

மேற்கூறியவற்றை உறுதிப்படுத்தத் தவறுவதின் விளைவாக, SI/ECS/NACH ஆணை/ காசோலை பணமாகாதிருத்தல் நிகழ்ந்து, அது கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தவறுதல் நிகழ்வாகக் கருதப்பட்டு, அது குறித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள விளைவுகளை ஏற்படுத்தும். அதனுடன் பாரபட்சம் இல்லாமல், அது போன்று பணமாகாதிருத்தல் கடன் வழங்குபவரை சட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய குற்றவியல் பரிகாரங்களையும் செயல்படுத்தச் செய்யலாம்.

**X. முன்கூட்டியே செலுத்துதல்/முன்கூட்டியே தீர்த்தல்**

கடன் பெறுபவர்(கள்) கடன் வழங்குபவருக்கு எழுத்துப்பூர்வமாக முன்னறிவிப்பு கொடுப்பதன் மூலம் கடனை முன்கூட்டியே செலுத்தலாம்/முன்கூட்டி தீர்க்கலாம். அத்தகைய முன்கூட்டியே செலுத்துதல்/முன்கூட்டியே தீர்த்தல் அவ்வப்போது பொருந்தக்கூடிய கடன் வழங்குபவரின் முன்கூட்டியே செலுத்துதல் /முன்கூட்டியே தீர்த்தல் விதிகள் மற்றும் கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டது. முன்கூட்டியே செலுத்துதல்/முன்கூட்டி தீர்த்தல் காசோலை மூலம் மேற்கொள்ளப்பட்டால், கடன் பெறுபவரின் காசோலை பணமாக்கப்பட்டு, கடனளிப்பவரின் கணக்கில் வரவு வைக்கப்படும்போது மட்டுமே முன்கூட்டியே செலுத்துதல் /முன்கூட்டி தீர்த்தல் நடைமுறைக்கு வரும்/செலுத்தப்பட்டதாகக் கருதப்படும்.

முன்கூட்டியே செலுத்துதல்/முன்கூட்டி தீர்த்தல் கட்டணங்கள் ஏதேனும் இருந்தால், அவை கட்டணங்கள் அட்டவணையின்படி அத்தகைய முன்கூட்டியே செலுத்துதல்/முன்கூட்டி தீர்த்தலுக்குப் பொருந்தும். இருப்பினும், மாறும் வட்டி விகிதம் கொண்ட கடன்கள் அல்லது கலப்பு வட்டி விகிதம் கொண்ட கடன்கள் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கு (அக்காலத்தில் நிலையான வட்டி விகிதம் பொருந்தும்) பிறகு, முன்கூட்டியே செலுத்துதல்/முன்கூட்டி தீர்த்தல் போன்றவற்றுக்குக் கட்டணங்கள் விதிக்கப்படாது. அதன் பிறகு மாறும் விகிதம் பொருந்தும்.

**XI. பிணையம்**

கடன் தொகை, அதனுடன் சேர்த்து வட்டி, கட்டணங்கள், செலவுகள், அபராதக் கட்டணங்கள், கூடுதல் வட்டி, மேலதிக வட்டி, செலவுகள் மற்றும் கடன் ஒப்பந்தம் மற்றும் பிற நிதி ஆவணங்களின் கீழ் கடன் பெறுபவரின் பிற கடமைகள் ஆகியவை பின்வருவனவற்றால் பாதுகாக்கப்படும்:

a. வீட்டுக் கடன்கள் எனும் பட்சத்தில் கடன் பெற்று வாங்கப்படும் சொத்தின் மீது, அல்லது LAP எனும் பட்சத்தில் வேறு ஏதேனும் அசையா (குடியிருப்பு) சொத்தின் மீது மேற்கொள்ளும் முதல் மற்றும் பிரத்தியேக அடமானம் (கடன் வழங்குபவர் ஏற்றுக்கொள்ளும் விதத்திலும் வழிமுறையிலும்). கடனளிப்பவருக்கு தன் சுய விருப்பப்படி, வடிவம், வழிமுறை, வகை மற்றும் அடமானம் அல்லது பிற பிணையத்தை மேற்கொள்ளும் நேரம் ஆகியவற்றைத் தீர்மானிக்க உரிமை உண்டு;
b. பொருந்தக்கூடிய இடங்களில் உத்தரவாதம் அளிப்பவர் (கார்ப்பரேட் அல்லது தனிப்பட்ட ரீதியில்) மூலம் உத்தரவாதம் அளித்தல்.
c. டிமாண்ட் பிராமிசரி நோட்டு(கள்);
d. கடனளிப்பவருக்குத் தேவைப்படும் கூடுதல் பாதுகாப்பு (கடன் பெறுபவர் ஏற்றுக்கொள்ளும் வடிவம் மற்றும் வழிமுறையில்).

**XII. காப்பீடு**

கடன் பெறுபவர், தன்னுடைய தனித்த செலவு மற்றும் பொறுப்பில், கடன் வழங்குபவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய காப்பீட்டு நிறுவனத்துடன், கடனளிப்பவருக்குத் தேவைப்படும் தொகைகள் மற்றும் அத்தகைய காலகட்டங்களுக்கு, அனைத்து காப்பீடு செய்யக்கூடிய இடர்களுக்கு எதிராகவும், சொத்தை காப்பீடு செய்வார். பாலிசியின் கீழ் கடன் வழங்குபவர் ஒரே பயனாளியாக/இழப்பு பெறுபவராக மாற்றப்படுவார்/குறிப்பிடப்படுவார். மேலும் அதற்கான ஆதாரம் கடனளிப்பவரிடம் சமர்ப்பிக்கப்படும். கடனளிப்பவருக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் கடன் பெறுபவர் சொத்தை காப்பீடு செய்யத் தவறினால், கடனளிப்பவர் தனது சுய விருப்பத்தின்படி, பொருத்தமானதாகக் கருதும் அனைத்து அபாயங்களுக்கும் ஒரு காப்பீட்டு நிறுவனத்திடம் சொத்துக் காப்பீட்டை ஏற்படுத்தச் செய்து, காப்பீட்டுக் கட்டணங்களை கடன் பெறுபவரின் கடன் கணக்கில் கழித்துக்கொள்வதற்கு கடன் வழங்குபவருக்கு உரிமை உண்டு.

**XIII. தவறுதல் நிகழ்வு(கள்)**

கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தவறுதல் நிகழ்வுகளில் மற்றவற்றுடன் சேர்ந்து பின்வருவனவும் அடங்கும்:

(a) பாதுகாக்கப்பட்ட பொறுப்பேற்புகளை (அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதி) உரிய தேதிகளில் செலுத்துவதில் நிகழும் ஏதேனும் தவறுதல்.
(b) கடன் தொகை அல்லது அதன் எந்தப் பகுதியையும், அதன் நோக்கத்திற்காக (கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி) அல்லாது வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்துதல்.
(c) கடன் ஒப்பந்தம், பிணைய ஆவணங்களின் கீழ் அல்லது அவற்றுக்கு இணங்க செயல்படுத்தப்பட்ட பிற ஒப்பந்தங்கள்/ஆவணங்களில் மற்றும்/அல்லது விண்ணப்பப் படிவத்தில், கடன் வாங்குபவரால் செய்யப்பட்ட பிரதிநிதித்துவங்கள், உத்தரவாதங்கள், அறிவிப்புகள் அல்லது அறிக்கைகள், அல்லது கடன் வாங்கியவர் கொடுத்துள்ள வேறு ஏதேனும் தகவல்கள் அவை உருவாக்கப்பட்ட நேரத்தில் அல்லது உருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் நேரத்தில் தவறானவை, பொய்யானவை அல்லது பிழையானவை எனக் கண்டறியப்படுதல்.
(d) கடன் ஒப்பந்தம், ஏதேனும் பாதுகாப்பு ஆவணங்கள் மற்றும்/அல்லது அவற்றுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட மற்ற ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் கீழ் எந்தவொரு உடன்படிக்கை, கடமை, விதி, நிபந்தனை அல்லது கடனாளியின் மீது சுமத்தப்பட்ட பொறுப்பேற்பு அல்லது கடனாளியால் ஏற்கப்பட்ட பொறுப்பேற்பை செயல்படுத்துவதில் அல்லது கடைப்பிடிப்பதில் கடனாளியால் நிகழும் ஏதேனும் மீறல் அல்லது தவறுதல்
(e) கடன் வழங்குபவரின் கருத்துப்படி, பிணையமளிக்கப்பட்ட சொத்துகளில் அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதியில் ஏதேனும் சீர்குலைவு அல்லது குறைபாடு, அல்லது அதன் மதிப்பு அல்லது சந்தை விலையில் ஏதேனும் சரிவு அல்லது தேய்மானம் இருந்தால் (உண்மையானதோ அல்லது நியாயமாக எதிர்பார்க்கப்படுவதோ); மற்றும்/அல்லது
(f) கடன் வழங்குபவரின் கருத்துப்படி, கடன் மற்றும் பிற பிணையமளிக்கப்பட்ட பொறுப்பேற்புகளை கடன் வழங்குபவருக்கு முழுமையாகத் திருப்பிச் செலுத்துவதற்கும், கடன் ஒப்பந்தம், பிணைய ஆவணங்கள் அல்லது தொடர்புடைய ஏதேனும் ஆவணம்/ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் கடமையைச் செய்வதற்குமான கடனாளியின் திறனை எதிர்மறையாகப் பாதிக்கும் சாத்தியக்கூறுடைய ஏதேனும் ஒரு நிகழ்வு அல்லது சூழ்நிலை.

கடன் ஒப்பந்தம் அல்லது வேறு ஏதேனும் நிதியுதவி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஏதேனும் தவறுதல் நிகழ்வு நடந்தால், நிலுவையில் உள்ள அசல் தொகை மற்றும் நிலுவையிலுள்ள வட்டித் தொகை மற்றும் வேறு ஏதேனும் கட்டணங்கள், அபராதக் கட்டணங்கள், சேவைத் தொகைகள் போன்றவை உடனடியாக செலுத்தப்பட வேண்டும். மேலும் அத்தகைய நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்காக பிணையத்தை செயல்படுத்துவது உள்ளிட்ட, ஆனால் அதனால் வரம்புக்குட்படுத்தப்படாத, கடன் ஒப்பந்தம் அல்லது வேறு ஏதேனும் நிதியுதவி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை எடுக்க கடன் வழங்குபவருக்கு உரிமை உண்டு.

**XIV. குறுக்கு தவறுதல் நிகழ்வு மற்றும் குறுக்கு பிணையமளித்தல்**

கடன் வாங்குபவர்(கள்) DBS வங்கி மற்றும்/அல்லது அதன் வாரிசுரிமை கொண்டவர் அல்லது DBS குழும நிறுவனங்களின் ஏதேனும் துணை நிறுவனங்களுடனான (ஒட்டுமொத்தமாக "DBS குழு") வேறு ஏதேனும் கடன்/வசதி ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையில் தவறினால், அது கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கடன் ஒப்பந்தம் மற்றும் அதன் விளைவுகளின் அடிப்படையில் ஒரு தவறுதல் நிகழ்வாகக் கருதப்படும். மேலும் பிற நிதிசார் ஆவணங்களும் அதனைப் பின்பற்றும்.

**XV. தகவலளித்தல்**

தொடர்புடைய இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல்களின்படி, கடனைப் பெற்ற எந்தவொரு கடனாளி தொடர்பான கடன் தகவலையும், கடன் வழங்குபவர் கடன் தகவல் நிறுவனத்திற்கோ அல்லது பிற உரிமம் பெற்ற பணியகத்திற்கோ மாதாந்திர/காலகட்ட அடிப்படையில் வழங்குவார்.

பிறவற்றுடன் சேர்த்து கடன் தகவல் நிறுவனத்துடனான எந்தவொரு பாதகமான கிரெடிட் வரலாற்றையும் தவிர்ப்பதற்காக, கடனைப் பொறுத்தமட்டில் நிலுவையிலுள்ள/செலுத்த வேண்டிய அனைத்துத் தொகைகளும் சரியான நேரத்தில் செலுத்தப்படுவதைக் கடன் பெறுபவர்(கள்) உறுதி செய்ய வேண்டும்.

**XVI. கடன் பெறுபவர்கள் மற்றும் உடன்-கடன் பெறுபவர்கள்**

ஒன்றுக்கு மேற்பட்ட கடனாளிகளுக்குக் கடன் வழங்கப்படும்போது, அனைத்து வட்டி, மற்றும் ஏதேனும்/அனைத்து கட்டணங்கள், சேவைத் தொகைகள், அபராதக் கட்டணங்கள், கூடுதல் வட்டி, மேலதிக வட்டி மற்றும் நிலுவையிலுள்ள/செலுத்த வேண்டிய மற்றவற்றுடன் சேர்த்து, கடன் ஒப்பந்தம், பிணைய ஆவணங்கள் மற்றும் கடன் சார்ந்த பிற தொடர்புடைய ஆவணங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பதற்கான கடன் பெறுபவர் மற்றும் அனைத்து உடன்-கடன் பெறுபவர்களின் பொறுப்பு, எல்லா நேரங்களிலும் கூட்டானதும் தனித்தனியானதும் ஆகும்.

**XVII. முகவரி அல்லது பிற விவரங்களில் மாற்றம்**

வீட்டு முகவரியில் அல்லது கடன் தொடர்பாக கடன் வழங்குபவருக்கு வழங்கப்பட்ட பிற தகவல்களில் ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால் அது குறித்து கடன் பெறுபவர் கடன் வழங்குபவருக்குத் தெரிவிக்க வேண்டும். அத்தகைய மாற்றங்கள் குறித்து கடன் வழங்குபவருக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

**XVIII. வாடிக்கையாளர் சேவை**

சேவை தொடர்பான எந்த சிக்கல்களுக்கும், வாடிக்கையாளர்கள் பின்வரும் வகைகளில் கடன் வழங்குநரைத் தொடர்புகொள்ளலாம்:

(i) எங்கள் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள வாடிக்கையாளர் பராமரிப்பு எண்களை அழைத்தல்.

(ii) DBS வங்கிக் கிளைக்கு வருகை தருதல்.

(iii) www.dbsbank.com/in என்ற எங்கள் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் உள்நுழைவதன் மூலம் ஆன்லைனில் கோரிக்கை அளித்தல்.

**XIX. வாடிக்கையாளர் குறை தீர்க்கும் நடைமுறை**

கடன் வழங்குபவர் வழங்கும் சேவைகளில் வாடிக்கையாளர் திருப்தி அடையாத சந்தர்ப்பங்கள் இருந்தால், அத்தகைய நிகழ்வுகளை முன்னிலைப்படுத்த மற்றும்/அல்லது புகாரைப் பதிவு செய்ய, வாடிக்கையாளர் எங்கள் அதிகாரபூர்வ இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள குறை தீர்க்கும் கொள்கையைப் பார்க்கவும்.

**XX. பொறுப்புத் துறப்பு**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், கடனளிப்பவரிடமிருந்து கடன் வாங்குபவர் பெறும்/பெற உத்தேசித்துள்ள கடனுக்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் சுருக்கப்பட்ட வடிவம் மட்டுமே. அவை கடன் ஒப்பந்தத்தின் முழு வரையறைகளையும் கொண்டிருக்கவில்லை.

விரிவான மற்றும் முழுமையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதனுடைய ஒரு நிலையான வடிவம் கடன் பெறுபவரின் பார்வைக்காகவும், புரிந்துகொள்வதற்காகவும் மற்றும் உடனடி மேற்கோளாகவும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடன் பெறுபவர் கடன் ஒப்பந்தத்தை முழுமையாகப் படித்து, அதன் உள்ளடக்கங்களை கவனமாகப் புரிந்துகொண்ட பின் அதில் கையெழுத்திட வேண்டும். அது எந்த சந்தர்ப்பத்திலும் இறுதியானதாகவும் கடன் பெறுபவரைக் கட்டுப்படுத்துவதாகவும் அமைவதுடன், MITC மற்றும் அந்தக் கடன் ஒப்பந்த விதிமுறைகளுக்கு இடையே ஏதேனும் இசைவின்மை/முரண்பாடு உருவானால் அதுவே மேலோங்குவதாகவும் இருக்கும். தேவைப்பட்டால், கடன் பெறுபவர், இதன் உள்ளடக்கம் மற்றும் கடன் ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் மற்றும் இதன் கீழும் அதன் கீழும் உள்ள அவரது /அவர்களது/அதன் கடமைகள், கையொப்பமிடுவதால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டிருப்பதை உறுதிசெய்ய, அவரது/அவர்களது / அதன் வழக்கறிஞர்களிடமிருந்து சட்ட ஆலோசனையைப் பெற வேண்டும்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், கடனளிப்பவரிடமிருந்து கடன் வாங்குபவர் பெறும்/பெற உத்தேசித்துள்ள கடனுக்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் சுருக்கப்பட்ட வடிவம் மட்டுமே. அவை கடன் ஒப்பந்தத்தின் முழு வரையறைகளையும் கொண்டிருக்கவில்லை.

இங்கு பயன்படுத்தப்படும் பெரிய எழுத்துக்கள் கொண்ட சொற்கள் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளில் அமைந்தவையாகும்..